**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், தைத்திங்கள் 13 ம் நாள்

**இ.ம.எண். 5/2025**

**in**

**அ.வ.எண். 29/2018**

1. செல்லம் (இறப்பு)
2. சதீஸ்குமார்
3. மணிமேகலை
4. ரமேஷ்குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஜெயக்கண்ணன்
2. ராஜாத்தி ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்
3. P.தெண்டபாணி

... 5 ம் மனுதாரர்/ புரபோஸ்ட்பார்ட்டி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 19.01.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.லிங்கசாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 5ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக சேர்த்துக்கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2) பிரிவு 151ன் படி மனுதாரரால் இம்மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

### 1.மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–

i) அசல் வழக்கானது இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகளால் 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு மனுதாரர்கள் தாவா சொத்தைப் பொறுத்து 5ம் மனுதாரருக்கு கடந்த 06.02.2018ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். தாவா சொத்து 5ம் மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்ட நிலையில் தாவா சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் அற்றுப்போய்விட்டது.

ii) இந்நிலையில் மேற்படி வழக்கிற்கு தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் மனுதாரர் அவசியமான தரப்பினர் ஆவார். மேற்படி 5ம் மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக சேர்த்துக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு பொருளால் ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே 5ம் மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக சேர்த்துக்கொள்ள உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>**

i) மனுதாரர்கள் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒத்துக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு வாதிகள் தரப்பில் வேண்டுமென்றே பல வாய்தா பெறப்பட்டு இறுதியாக கடந்த 02.08.2023 ம் தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் யாரும் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காததால் மேற்படி அசல் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்த இ.ம.எண்.385/2023 ல் ஏற்பட்ட உத்தரவின்பேரில் அசல் தாவா மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தாவா சொத்தை கடந்த 06.02.2018 ம் தேதி 3 ம் எதிர்மனுதாரருக்கு வாதிகள் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள். பின்னிட்டு கடந்த 7–1/2 வருடங்களுக்கு பின் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை செய்யும்வரை தாவா சொத்து மனுதாரர்கள்/வாதிகள் சுவாதீனத்தில் அனுபவித்து வருவதாக சாட்சியையும் அளித்துவிட்டு தற்போது தாவா சொத்தில் எவ்வித உரிமையும் பாத்தியமும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு அற்றுப்போய் விட்டதாக கூறியிருப்பது ஏற்புடையதல்ல.

iii) நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையிலும் வாதிகள் தாக்கல் செய்திருந்த இ.ம.எண்.385/2023 மனுவில் எதிர்மனுதாரர்கள் தாக்கல்

செய்திருந்த எதிருரையிலும் தாவா சொத்துக்களை வாதிகள் 3ம் நபருக்கு விற்பனை செய்துள்ள விபரத்தை தெரிவித்திருந்தார். மனுதாரர்கள்/வாதிகள் அப்போதும் மேற்படி 3ம் எதிர்மனுதாரரை அசல் தாவாவில் சேர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு தாவா சொத்தில் தங்களுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும் தாவா சொத்தை கிரையம் பெற்ற 3ம் எதிர்மனுதாரருக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டதாகவும் கூறியிருப்பது முன்னுக்கு பின் முரணாக உள்ளது. இந்த எதிர்மனுதாரர்களை வீண் அலைக்களிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்கு பாத்தியமில்லாத சொத்தை பொறுத்து தாவா தாக்கல் செய்துள்ளார்கள்.

iv) மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. மேலும் கடந்த 7-1/2 வருடங்களாக தாவா சொத்தை கிரையம் பெற்ற 3ம் எதிர்மனுதாரரை அசல் தாவாவில் சேர்க்காததிற்கு எவ்வித காரணமும் இம்மனுவில் கூறவில்லை. இதுவரை தாவா சொத்தை தங்களுக்கு தான் பாத்தியம் என்று கூறிவிட்டு தற்போது 3ம் எதிர்மனுதாரருக்கு தான் பாத்தியம் என்று கூறி விளம்புகை பரிகாரம் கோர மனுதாரர்கள்/வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. பல வருடங்களாக அமைதியான முறையில் ஹோட்டல் வைத்து தொழில் செய்து வரும் 1, 2 எதிர்மனுதாரர்களை மிரட்டி அக்கிரம லாபம் அடையும் நோக்கில் மனுதாரர்கள்/வாதிகளும் 3ம் எதிர்மனுதாரரும் சேர்ந்துகொண்டு பொய்யான காரணங்களை கூறி அசல் தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவை 1, 2 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு மனுதாரர்கள் தாவா சொத்தைப் பொறுத்து 5ம் மனுதாரருக்கு கடந்த 06.02.2018ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் தாவா சொத்து 5ம் மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்ட நிலையில் தாவா சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் அற்றுப்போய்விட்டது என்றும் இந்நிலையில் மேற்படி வழக்கிற்கு தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் மனுதாரர் அவசியமான தரப்பினர் என்றும் எனவே 5ம் மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக சேர்த்துக்கொள்ள உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 7–1/2 வருடங்களாக தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் மனுதாரரை அசல் தாவாவில் சேர்க்காததிற்கு எவ்வித காரணமும் இம்மனுவில் கூறவில்லை என்றும் இதுவரை தாவா சொத்தை தங்களுக்கு தான் பாத்தியம் என்று கூறிவிட்டு தற்போது 5ம் எதிர்மனுதாரருக்கு தான் பாத்தியம் என்று கூறி விளம்புகை பரிகாரம் கோர மனுதாரர்கள்/வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 14.06.2018 அன்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 09.12.2022 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 02.08.2023 அன்று வாதிகள் தரப்பில் விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு பின்னிட்டு இ.ம.எண்.385/2023 மனுவில் 30.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அசல் வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.09.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 மற்றும் நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 06.10.2025 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணையின் போது பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கடந்த 06.11.2025 அன்று 5ம் மனுதாரரை அசல் வழக்கில் 5ம் வாதியாக சேர்த்துக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனுவோடு தாக்கல் செய்யப்பட்டுள்ள 06.02.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும்போது இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபரான தெண்டபாணி என்பவருக்கு மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படி கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களைப் பொறுத்து தெண்டபாணி என்பவர் பெயருக்கு மனுதாரர்களால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற சங்கதியானது 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ள தெண்டபாணி என்பவர் இவ்வழக்கை தீர்மானிப்பதற்கு அவசியமான தரப்பினர் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

8. எனவே அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள நிலையில் தாவா சொத்தைப் பொறுத்து மனுதாரர்கள் தெண்டபாணி என்பவருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ள நிலையில் மேற்படி நபர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பதால் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது என்றாலும் தாவா சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர்கள் கடந்த 06.02.2018 தேதியில் தெண்டபாணி என்பவருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் சுமார் 7 ஆண்டுகளாக இந்த வழக்கை நடத்தி வந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

9. 1, 2 எதிர்மனுதாரர்கள் கடந்த 7–1/2 வருடங்களாக தாவா சொத்தை கிரையம் பெற்ற 5ம் மனுதாரரை அசல் தாவாவில் சேர்க்காததிற்கு எவ்வித காரணமும் இம்மனுவில் கூறவில்லை என்றும் தாவா சொத்தை தங்களுக்கு தான் பாத்தியம் என்று கூறிவிட்டு தற்போது 5ம் மனுதாரருக்கு தான் பாத்தியம் என்று கூறி விளம்புகை பரிகாரம் கோர மனுதாரர்கள்/வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல்

வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் கடந்த 06.02.2018 தேதியில் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபரான இம்மனுவில் கண்ட தெண்டபாணி என்பவருக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து கடந்த 06.02.2018 தேதியில் கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ள நிலையில் மேற்படியார் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பதால் மேற்படியாரை அசல் வழக்கில் 5 ம் வாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் உபயதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவில் கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபரான தெண்டபாணி என்பவர் அசல் வழக்கை இறுதியாக தீர்ப்பதற்கு அவசியமான தரப்பினர் என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது கடந்த 2018 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து 06.02.2018 ம் தேதியன்று மனுதாரர்களால் தெண்டபாணி என்பவருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு மேற்படி கிரைய தேதியிலிருந்து நாளது தேதிவரை மேற்படி தெண்டபாணி என்பவரை அசல் வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் தற்போது அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் அசல் வழக்கில் 5 ம் வாதியாக மேற்படி தெண்டபாணி என்பவரை கட்சி சேர்க்க வேண்டி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மிகவும் காலதாமதமாக இம்மனுவை

தாக்கல் செய்துள்ளதாலும் இதனால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 30.01.2026ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 30.01.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஜனவரி மாதம் 27 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.01.27 18:28:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.01.27 18:28:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.